

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டி ஊராட்சி நடுபட்டு கிராமத்தில் 7 வயது சிறுமி ஹேமாவதி மாயமான விவகாரத்தில் ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன் நேரில் சென்று சிறுமியின் பெற்றோரைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், பச்சையப்பன் உள்ளனர்.

செஞ்சி அருகே 7 வயது சிறுமி 3 நாட்களாக மாயம் - காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை!

எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. கடும் கண்டனம்!

செஞ்சி, அக் 15-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே ஆலம் பூண்டி ஊராட்சி நடு பட்டு கிராமத்தில் 7 வயது சிறுமிஹேமாவதி மாய மான விவகாரத்தில் ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணி வேந்தன் நேரில் சென்று சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் தெரி வித்த அவர் காவல்துறையி னரிடம் இச்சம்பவம் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து அவர் செய் தியாளர்களிடம் கூறுகை யில்

ஆலம் பூண்டி ஊராட்சி யில் காணாமல் போன 7 வயது குழந்தை, 3 நாட்க ளுக்கு முன்பு வீட்டிலே படுத்து உறங்கிய குழந்தை காணாமல் போய், இது வரை நடவடிக்கை எடுக் காத காரணத்தால் நாங் கள் நேற்று செய்தி அறிந்து நேரில் விசாரிக்க வந் தோம்.

ஆண்டு கொண்டிருக் கின்ற, தமிழக முதல்வராக இருக்கின்ற ஜோசப் விஜய் அவர்கள் ஆட்சியிலே நிறைய தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. குழந்தைகளுடைய பாலி யல் தொல்லைகள், பெண் களுடைய கற்பழிப்பு, அந்த லிஸ்ட்ல தான் இது வும் சேர்ந்திருக்கிறது.

3 நாட்களாக, 2ம் வகுப்பு படிக்கின்ற குழந்தை காணவில்லை என்றால், இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? சிங்கப் பெண் என்ற ஒரு காவல்து றையை இங்கே ஏற்ப டுத்தி, துரித நடவடிக்கை என்று ஒரு பொய்யான ஆளுமையில் ஆண்டு கொண்டிருக்கின்ற விஜய் அவர்களுக்கு சொல்லிக் கொள்வதெல்லாம்...

இந்த அரசு ஏதோ பெண்களை காப்பாற்ற வும், பெண்கள் நலனுக் காக சிங்கப்பெண் என்ற ஒரு போலீசை நிர்வகிக்கி றோம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த விஜய் அரசு,

குழந்தையை உயிரு டன் மீட்டுத் தர வேண் டும். இதுதான் இந்த பகுதி மக்களின் கோரிக்கை.

பொதுவாக எடுத்துக் கொண்டால்சிறுமி காணா மல் போனதை தீவிரமாக விசாரிக்க வேண்டும். அவ ருடைய பெற்றோரை விசாரிக்க வேண்டும். இங்கே இருக்கின்ற *CCTV Footage*கள் எல்லாம் பார்க்க வேண்டும். இந்த குழந்தை காணாமல் போன விவகா ரத்தில் இந்த அரசு மெத்த னமாகத்தான் செயல்படுகி றது என்பது பட்டவர்த்தன மாக தெரிகிறது. சாதா ரண ஒரு நிகழ்ச்சியை கூட துரிதமாக கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள் ளது. ஸ்காட்லாந்து போலீ சுக்கு அடுத்து தமிழ்நாடு போலீஸ் என்று பெரு மைக்குரிய போலீசாக சொல்லப்பட்ட நிலை யில், இன்று இந்த ஆட்சி யில் 4 தினங்களாக குழந்தை தேடப்பட்டு வருகிறது.

அந்த குழந்தை உயிரு டன் இருக்கிறதா, இல் லையா என்ற நிலைமை கூட தெரியவில்லை என்ப துதான் அதிர்ச்சியான விஷயம். அது உணவுக் காக என்ன செய்கிறது, எங்கே பரிதவிக்கிறது. அதை கடத்தியிருக்கிறார் களா, இல்லை பாலியல் தொந்தரவுக்காக யாரா வது வலுக்கட்டாயமாக அழைத்து சென்றிருக்கி றார்களா என்பதை இந்த அரசு கண்டுபிடிக்க வேண் டும்.

எதுவாக இருந்தாலும், இதில் முரண்பாடான கருத்தோ, தவறான விளை வுகள் ஏற்பட்டால், மக் கள் பிரதிநிதியாக நாங் கள், இந்த செஞ்சி தொகுதி மக்கள் சார்பில் கடும் போராட்டம் நட வடிக்கை எடுப்போம் என ஆரணி எம்.பி. எம்.எஸ் . தரணி வேந்தன் தெரிவித் தார்.

இந்நிகழ்வின் போது செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலை வர் மொக்தியார் அலி மஸ் தான், ஒன்றிய செயலாளர் கள் நெடுஞ்செழியன், பச்சையப்பன், நிர்வாகி கள் வாசு, அய்யா துரை, எஸ்.பி.சம்பத், அர்ஷத், செல்வம், ஒன்றிய கவுன் சிலர் கேமல்,ஊராட்சி மன்றத் தலைவர் முத்தம் மாள் சேகர் உள்ளிட் டோர் உடனிருந்தனர்.

செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளில் நீர்மட்டம் சரிவு

சென்னை மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

சென்னை, அக். 15-

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிக ளுள் செம்பரம்பாக்கம் ஏரியும் ஒன்று. இந்த ஏரி சென்னை மக்களின் குடி நீர் தேவையை பெருமள வில் பூர்த்தி செய்து வருகி றது. செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து குறைந்த ளவே வருகிறது. இதனால் கோடைகாலம் போன்று செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் சரிந்து வருகி றது. நேற்றைய நிலவரப் படி செம்பரம்பாக்கம் ஏரி யின் மொத்த கொள்ளள வான 3,645 மி.கன அடி யில், தற்போது 1,254 மி.கன அடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது.

ஏரிக்கு நீரின் வரத்து வினாடிக்கு 200 கன அடி யாக உள்ளது. அதே நேரத் தில் சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக ஏரியி லிருந்து நாள் ஒன்றிற்கு வினாடிக்கு 144 கன அடி தண்ணீர் வெளியேற்றப் பட்டு வருகிறது. எப்போ தும் கடல்போல் காட்சிய ளிக்கும் செம்பரம்பாக்கம் ஏரி தற்போது வறண்டு கிடக்கிறது. இதனால் பார்வை யாளர்களின் கூட்டம் குறைந்து ஏரி கலையிழந்து காணப்படுகி றது. கடந்த ஆண்டு இதே நாளில் செம்பரம்பாக்கம் ஏரியில் 2056 மி.கன அடி நீர் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பருவ மழை குறைந்து செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் சரிந்து வருவ தால், சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய சிக்கராயபுரம் கல் குவாரி நீரை முறையாக சுத்திகரிப்பு செய்து பயன் படுத்துவது தொடர்பாக, பொதுப்பணித்துறை அதி காரிகள் பல்வேறு சோத னையில் ஈடுபட்டு வரு கின்றனர். மழை இல்லாத காலங்களில் செம்பரம் பாக்கம் ஏரியின் நீர், ஆவி யாகி வற்றிப்போவதை தடுக்கும் வகையில் ஏரி யின் கரையை சுற்றிலும் ஏராளமான பனை மரங் களை நட்டு வைத்து நீர் வளத்தை பாதுகாக்க அதி காரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ள னர்.

புழல்:

சென்னை புழல் ஏரி 3300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டது. தற்போது ஏரியில் 1876 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. 21.2 அடி உயரம் கொண்ட ஏரியில் 14.00 அடி உயரத்தில் நீர் இருப்பு உள்ளது. பூண்டி ஏ ரி யி ல் இ ரு ந் து திறக்கப்பட்டு வந்த நீர் தற்போது முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதால் புழல் ஏரிக்கு நேற்று 225 கன அடியாக இருந்த நீர்வ ரத்து 90 கன அடியாக சரிந் துள்ளது. சென்னை குடிநீ ருக்காக புழல் ஏரியில் இருந்து 172 கன அடி தண் ணீர் திறக்கப்பட்டு வருகி றது. கடந்தாண்டை காட் டிலும் புழல் ஏரியின் நீர் மட்டம் வெகுவாக சரிந் துள்ளது. கடந்தாண்டு இதே நாளில் 3002 மில்லி யன் கன அடி என 91 சதவீ தம் நீர் இருப்பு இருந்த நிலையில், இந்தாண்டு 1876 மில்லியன் கன அடி என 57 சதவீதம் மட்டுமே நீர் இருப்பு உள்ளது. எல் நினோ தாக்கத்தால் மழை குறைந்துள்ளதால் ஏரியில் நீர் இருப்பு வெகுவாக குறைந்து வருகிறது. இத னால் சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வடகிழக்கு பருவ மழையை எதிர்நோக்கி காத்திருக்கிறது.



தமிழ்நாடு மின்சார வாரியத்தை தனியார் மயமாக்க முயற்சித்து, தமிழக மக்களையும் பணியாளர்களையும் வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தலைமையில் மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பாக சென்னை மின்வாரிய தலைமை அலுவலகங்கள் முன்பு, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மின்வாரிய தொழிற்சங்கங்களான மின்சார தொழிலாளர் சம்மேளனம், கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம், மின் ஊழியர் மத்திய அமைப்பு (சி.ஐ.டி. மின்சார பிரிவு அண்ணா தொழிற்சங்கம் (அ.தி.மு.க.}, மின்வாரிய ஜனதா தொழிற்சங்கம், ஐ.என்.டி.யு.சி. (சேவியர்), மின்வாரிய பொறியாளர் சங்கம், மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ.), தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம், மின்வாரிய பொறியாளர் கழகம், டாக்டர் அம்பேத்கர் யூனியன், மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேஷன் உள்ளிட்ட தொழிற்சங்கங்களைச் சார்ந்த 1000க்கும் மேற்பட்டோர் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கு பெற்றனர்.

தேர்தல் ஆணையர் டி.என். சேஷன் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது என்ன?

"தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்பதில், எந்தச் சமரசத்திற்கும் இடமில்லை; அவர் பதவி விலகுவதோடு மட்டுமல்லாமல், தேர்தல் ஆணை யத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் பாதிப்புகளும் சரி செய் யப்பட்டு அதன் சுதந்திரமும், நேர்மையும் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

13 கோடி இந்திய மக்களின் ஜனநாயகக் கடமையான வாக் களிக்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒன்றியத்தை ஆளும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி விலகச் செய்வதோடு, அவர் மீது உரிய குற்றவியல் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கி உள்ளன. ஆனால், ஒன்றிய அரசு மவுனம் காத்து வருகிறது. காந்தி ஜெயந்தி நாளான அக்டோபர் 2 முதல் தலைமைத் தேர் தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி போராட் டம் தலைநகர் டெல்லியில் நடைபெற்று வருகிறது. விமானம் ஏற முயன்றபோது, நிலயத்தில் புகுந்து கரப்பான் பூச்சி ஜனதா தலைவர் அபிஜித் தீப்கே கைது செய்யப்பட்டிருக்கிறார். ஓராண்டு காலம் பொது அமைதிக்கு குந்தகம், இடையூறு ஏதும் விளைவிக்காமல் இருப்பாரானால், அதனை ஏற்று; அவருக்குப் பிணையில் விட டெல்லி நீதிமன்றம் நிபந்தனையுடன் அனுமதி அளித்திருக்கிறது.

அதுபோல மம்தா பானர்ஜி, பினராயி விஜயன் அரவிந்த் கெஜ்ரவால் உள்ளிட்ட தலைவர்களும் கைதாகி உள்ளனர். ஜந்தர். மந்திருக்குள் நுழைய முயனற 7,000 க்கு மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்கள், இளம்பெண்கள் ஆகியோர் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளனர். இளம் பெண்களை வலுக்கட் டாயமாக இழுத்துச் சென்று கைது செய்த டெல்லி போலீசார் நடவடிக்கைக்கு எதிராக மாணவர்கள் தரையில் அமர்ந்தும், படுத்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்பொழுது மக்களிடையே தன்னெழுச்சிப் போராட்டமாகமாறி உச்சத்தை எட்டி உள்ளது.

ஞானேஷ்குமாரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்; அவ ரைச்சட்டத்தின் முன்னிறுத்தி அவரையும், அவர் பின்னணியில் இருப்பவர்களையும் தண்டிக்க வேண்டும்; வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை நிறுத்த வேண்டும்; மீண்டும் வாக் குச் சீட்டு முறையை அமல்படுத்த வேண் டும் எனவும், இப்படியான வாக்குத் திருட் டைத் தடுக்கக் கோரி உச்ச நீதிமன்றம் நோக்கி எதிர்க்கட்சிகள் பேரணி நடத்தி முடித்துள்ளன.

ஞானேஷ் குமார் தனக்குள்ள அதிகார அத்துமீறலைச் சர்வாதிகார நோக்கோடு தான் தோன்றித்தனமாகப் பயன்படுத்தி உள் ளார். ஒன்றியத்தில் உள்ள பிரதமர் மோடி, அமித்ஷா ஆகியோரின் அரசியல் அழுத்தப் பின்னணியில் தேர்தல் சீர்திருத்தம் என்ற பெயரில் மோசடியான எஸ்.ஐ.ஆர். மூலம் வாக்குத் திருட்டு நடத்தியும், பல அரசியல் கட்சிகளின் ஆட்சி அமைக்கும் வாய்ப்பினை யும் கபளீகரம் செய்துள்ளார். ஆகவே, அவ ரைப் பதவி விலக்கு செய்வதோடு, அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப் பட்டுத் தக்க தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும்.

அரசியல்வாதிகள் மற்றும் ஆளுநர் கள் போன்றோர் அழுத்தங்களுக்குச் சிறிதும் அடிப்பணியாமல், சட்டம்ஒழுங்கு மற்றும் மக்களின் பாதுகாப்புக் கருதி மட்டும் தேர்தலை நடத்தும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பை நடத்தி வந்த வரலாற்று துணிச்சல் மிகுந்த டி.என்.சேஷன் என் பவர் நிரூபித்துக் காட்டினார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என். சேஷன் தனக் குள்ள பொறுப்பு பற்றியும், தனக்கு இணையாக மற்ற இரு தேர் தல் ஆணையர்களான எம்.எஸ். கில் மற்றும் ஜி.வி. ஜி.கிருஷ் ணமூர்த்தி எனும் இருவர்க்குப் பொறுப்பு வழங்கப்பட்டது குறித்தும் அரசியல் அமைப்புச் சட்ட உறுப்பு 324 (2) ஆல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி ஒன்றிய அரசின் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு (1993) தொடுத்திருந்தார். (T.N. Seshan_v_Union of India 1995 (4) SCC 611) அந்த வழக் கில் தந்த தீர்ப்பின்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இணைத்ததால் தேர்தல் ஆணையத்திற்கான கடமை, பொறுப்பு, செயல்பாடுகளை விதிமுறைகள் கூறுகிறது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் முக்கிய பகுதிகள்: "பல உறுப்பி னர் அமைப்பு மற்றும் பெரும்பான்மை விதிகள் (2:1)" தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு, கூட்டு விவாதத்தின் மூலம் முடி வுகளை எடுப்பது மற்றும் உறுப்பினர்களிடையே கருத்து வேறு பாடு ஏற்பட்டால், பெரும்பான்மையினரால்..... பெரும்பான்மை யினரின் பார்வை அமைப்பின் பார்வையாகும்', "உச்ச நீதிமன்ற தீர்ப்பு முக்கிய பகுதிகள். ஆங்கிலத்தில் 1. ("On Multi Member Body and Majority Rule (2:1) " The function of the Election Commission is to take decisions through the process of collective deliberation and in the event of a difference of opinion among the members, by a majority.....the view of the majority is the view of the body'.")

தகுதி மற்றும் அதிகாரங்களின் சமநிலை குறித்து: தலை மைத் தேர்தல் ஆணையரும் (CEC) மற்ற தேர்தல் ஆணை யர்களும் (ECs) சமமானவர்கள் ஆவர். தலைமைத் தேர்தல் ஆணையரின் அந்தஸ்து என்பது பல உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பின் தலைவருக்குரியதாகும்; மற்ற தேர் தல் ஆணையர்கள் மீது அவருக்கு மேலான அல்லது ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் ஏதுமில்லை. (On Equality of Status and Powers: The CEC and the ECs are equals. The status of the CEC is that of Chairman of a multi member body and exercise any over riding power over the other Election Commissioner".)

"சமமானவர்களுள் முதன்மையானவர்" (Primus Inter Pares) என்பது குறித்து: தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) ஒரு உச்ச அதிகார அமைப்பாகவோ அல்லது முடிவெடுக்கும் செயல்பாட்டில் மற்ற தேர்தல் ஆணையர்களை விட உயர்ந்த நிலையில் இருப்பவராகவோ கருதப்படுவதில்லை. அவர் வெறும் ஆணையத்தின் தலைவரே; அதாவது, "சமமானவர் களுள் முதன்மையானவர்" (primus inter pares) மட்டுமே ஆவார். (On "First Among Equals" Primus Inter Pares) " The CEC is not intended to be a Supreme authority or placed in a position superior to the other Election Commissioners in decision making. He is merely the Chairman of the Commission a primus inter pares (First among equals)"

பதவிக்கான பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட அந்தஸ்து ஒப் பீடு: "அரசியலமைப்பின் 324(5)வது பிரிவின் கீழ் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு (CEC) பதவி நீக்கத்திற்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள சிறப்புப் பாதுகாப்பானது, ஒரு நிறுவனமாகத் தேர்தல் ஆணையத்தின் (EC) சுதந்திரத்தை உறுதி செய்வதற் காகவே ஆகும். இது, சக ஆணையர்களை விடத் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்குவதற் காக உருவாக்கப்பட்டதல்ல." (On Protection of office Vs personal status: "The special protection against removal granted to the CEC under Article 324 (5) is to ensure the independence of the EC as an institution. It is not intended to confirm confer higher status on the individual CEC over the colleagues".)

தேர்தல் ஆணையர்களின் (ECs) நிலை குறித்து: "தலை மைத் தேர்தல் ஆணையரின் (CEC) முடிவே இறுதியானது என்று இருந்தால், அது மற்ற தேர்தல் ஆணையர்களை 'செய லற்ற அல்லது பெயரளவுக்கான' நிலைக்குத் தள்ளிவிடும். இது அரசியலமைப்பின் நோக்கமாகவும் இருந்திருக்க முடியாது. தேர்தல் ஆணையர்கள் இவ்வாணையத்தின் ஒரு பகுதியா வார்கள்; எனவே, முடிவெடுக்கும் செயல்பாட்டில் அவர்களுக் கும் பங்கு உண்டு." (On the status of Election Commissioners:(ECS) : "If the CEC's word were the final, it would render the other ECs 'non_ functional or ornamental'. This could not have been the constitutional intent. The EC's are part of the Commission and have a say in its decision making".)

பன்மைத்தன்மை மற்றும் கூட்டு ஞானம் குறித்து: அரசிய லமைப்பின் 324வது பிரிவில் பன்மைத்தன்மை எனும் கோட் பாடு தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. கூட்டு ஞானத்தை உறுதி செய்யவும், அதிகாரம் ஒரு தனிநபரிடம் குவிவதைத் தடுக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் வேண்டுமென்றே பல உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்ட மைப்பை இதில் அமைத்திருந்தனர். (On Plurality and collective wisdom: The concept of plurality is writ lase on the face of Article 324. The constitution makers had deliberately provided for a multimember structure to ensure collective wisdom and provent the concentration of power in a single individual.)

இப்படிப்பட்ட தீர்ப்பு விவரங்கள் இருக்கும்போது, எப்படி அத்து மீறி அரசியல் அமைப்புச் சட்டத்தையே காலில் போட்டு மிதித்து ஞானேஷ்குமார் நடந்து கொண்டார் என்பது தெளிவுப டுத்த வேண்டும் .

தீர்ப்பின் முக்கியப் பகுதி (ஆங்கில வடிவம்): தேர்தல் ஆணையத்திற்குள் கூட்டு அதிகாரம் மற்றும் சமத்துவம்: 1. அரசியலமைப்பின் 324வது பிரிவின் கீழ், மற்ற தேர்தல் ஆணையர்களை விடத் தலைமைத் தேர்தல் ஆணையர் உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டவர் அல்ல; தேர்தல் ஆணை யமானது ஒரு கூட்டு அல்லது பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகச் செயல்படும் வகையி லேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. முடிவெடுக்கும் அதிகாரம் மற்றும் அந்தஸ்து ஆகிய வற்றைப் பொறுத் தவரை, ஆணையத்தின் அனைத்து உறுப்பினர்களும் சமமான நிலையி லேயே உள்ளனர். (Important excerpt of the judgement (English Version) collective Authority and Equality within the Election Commission: 1. Chief Election commissioner (CEC) does not enjoy a status superior to that of the other Election Commissio ners (ECs) under Article (324) of the constitution, the Election Commission is envisioned to function as a collegial or multi member body. All members of the Commission stand on an equal footing regarding decision_ making power and status.)



கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட் சத்தில், பெரும்பான்மை முடிவே இறுதியானதாகக் கருதப்பட வேண்டும் மற்றும் முடிவுகள் கூட்டாக எடுக்கப்பட வேண்டும். மற்ற தேர்தல் ஆணையர்களின் முடிவுகளை மீறுவதற்குத் தலைமைத் தேர்தல் ஆணையருக்குத் தனிப்பட்ட 'வீட்டோ' (Veto) அதிகாரம் ஏதுமில்லை (In the event of events of a reverence of opinion among the numbers, the rule of majority must prevail and decisions shall be taken collectively. The CEC does not posses any individual Veto Power to by pass the decisions of the other Election Commissioners")

எனவே, தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என். சேசன் தொடர்ந்த உச்சநீதிமன்ற வழக்கின் தீர்ப்பின் சுருக்கம்: Key Take aways: இதுதான் சம அந்தஸ்து (equal status) தலை மைத் தேர்தல் ஆணையரும் மற்றும் அனைவராலும் அதிகா ரத்தில் சமமானவர்கள். பெரும்பான்மை விதி (Majority Rule) கருத்து வேறுபாடுகளின் போது 2:1 என்ற பெரும்பான்மை அடிப்படையில் முடிவு எடுக்கப்படும். தலைவர் (Chairman) தலைமைத் தேர்தல் ஆணையர் என்பவர் சமமானவர்களில் முதலாமானவர் (First among equals) மட்டுமே.

உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞரும், முன் னாள் தமிழ்நாடு அரசின் தலைமைக் கூடுதல் வழக்கறிஞருமான திரு. ஹாஜா நஜிருதீன் கூறும்போது 'தலைமைச் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் நடவடிக்கை சட்டவிரோத மானது என்றும், இரண்டு தேர்தல் ஆணையர்கள் தந்த கருத்தை ஏற்கா மல் தொடர்ந்து தன்னுடைய தனிப்பட்ட கருத்தைத் திணித்தது என்பது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்றும் விமர்சனம் செய்கிறார். ஞானேஷ் குமாரின் நடவடிக்கை சட்டபூர்வமானது அல்ல; அது இந்திய ஜனநாயகத்திற்கு எதிரானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். முகிந்தர் சிங் எது இந்திய அரசு (Mohinder Singh vs Union of India) என்ற வழக்கை சுட்டிக்காட்டி சூழ்நி லைக்கு ஏற்ப, தொகுதி முழுமைக்கும் அல்லது மாநில முழுமைக் குமோ நடைபெற்ற தேர்தல்களை மறு வாக்கெடுப்பு (Repoll) நடத்த உத்தரவிடலாம். ஆனால், தலைமைத் தேர்தல் அதிகாரி இரண்டு தேர்தல் அதிகாரிகள் தந்த கருத்துக்களை ஏற்காமல் தாமே முன்னின்று தனது கருத்தை வலிய திணித்துள்ளார்.

இது தேர்தல் விதிமுறைகளுக்கு நேர்மாறானது மட்டுமல் லாமல்; உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கும் எதிரானது" என்று தனது கருத்துக்களை விமர்சனமாகத் தந்திருக்கிறார். தேர்தல் ஆணையம் அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 324 எல்லைக்கு உட்பட்டுத் தான் செயல்பட வேண்டுமே ஒழிய அதனை மீறிச் செயல்படும் வகையில் உத்தரவுகள் ஏதும் பிறப்பித்தால், அவை நீதிமன்றத்தின் மறு சீராய்விலிருந்து தப்ப முடியாது. எனினும் மறுசீராய்வுக்கு உகந்ததா இல்லையா? (reviewable Or not) என்பது அந்தந்த நேர்வின் தன்மைகளைப் பொருத் ததாகும் என்று Dig Vijay_versus_ Union of India வழக்கில் கூறப் பட்டுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் அரசு வழக்கறிஞர் பி.ஹரிபாபு என்பவர் "எப்பொழுது அரசியல் சட்டத்தை மீறி நடந்து கொண்ட ஓர் தேர்தல் ஆணையர்; அந்தப் பதவியில் தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருப்பதில் எந்த நியாயமும் இல்லை; அவர் பதவியை விட்டு விலகித் தன் மீது சுமத்தப்பட்டுள்ள தேர் தல் முறைகேடு குற்றச்சாட்டுக்களுக்குத் தகுந்த விளக்கம் தந்து நீதிமன்றத்தில் நிரூபிக்கத் தயாராக வேண்டும்" என்று தனது ஆழ்ந்த வலுவான சட்டக் கருத்துகளைக் கூறியதோடு, அதிகா ரங்கள் பற்றி டி.என். சேஷன் வழக்கில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது என்கிறார்.

ஆகவே தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமா ரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளால் வைக்கப்படும் கோரிக்கை ஏற்கப்பட வேண்டும்.